## கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** தலைமையில்

# கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 16-09-2023 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், ‘முரசொலி மாறன் வளாகத்தில்’ உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : செப். 18 முதல் செப்.22 வரை நடைபெற உள்ள நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடர் - குறித்து**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 600 018.
நாள்- 04-09-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## பள்ளிபாளையம் ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் 250 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### மா.செ.மதுரா செந்தில் முன்னிலையில்!

நாமக்கல், செப். 5 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் 70 பெண்கள் உட்பட 250 பேர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இளங்கோவன் ஏற்பாட்டில், பாரத ஹிந்த் பரிவார் அமைப்பின் மாநில தொழிலாளர் அணி துணைத் தலைவர் தலைமையில், கொக்கராயன்பேட்டை, புதுப் பாளையம், காடச்சநல்லூர், ஓடப்பள்ளி, கோவிந்தம்பாளையம் பகுதிகளில் இருந்து 70 பெண்கள் உட்பட 250 பேர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர்.




### பீர்க்கங்காரணை கேஸ் சிலிண்டர் வெடிப்பு!

# சிலிண்டர் தரம் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## பெட்ரோலிய அமைச்சருக்கு டி.ஆர்.பாலு எம்.பி. கோரிக்கை!

சென்னை, செப். 5-

சென்னை, தாம்பரம், பெருங்களத்தூர் தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ள பீர்க்கங்காரணையில், 2.9.2023 அன்று தெருவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீட்டு உபயோக சமையல் கேஸ் சிலிண்டர் வெடித்து விபத்து ஏற்பட்டது. அந்நேரம் விபத்து நடந்த இடத்துக்கு எதிரில் இருந்த பள்ளி திறக்கப்படாததாலும், மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத காரணத்தாலும் எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. மேலும், அந்த வாகனத்தில் இருந்த மற்ற சிலிண்டர்களும் வெடி விபத்தில் சிக்கவில்லை என்பதால் பெரிய விபத்து நிகழாமல் தப்பியது.

**விசாரணை தேவை!**

இந்த சிலிண்டர் வெடி விபத்து தொடர்பாக அப்பகுதி பொதுமக்களும், தாம்



பரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ.வும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலுவிடம் நேரில் சந்தித்து விவரங்களைத் தெரிவித்தனர்.

வெடி விபத்தை ஏற்படுத்திய சமையல் எரிவாயு சிலிண்டர் அப்பகுதியில் உள்ள இந்தியன் ஆயில் நிறுவனத்தின் இண்டேன் கேஸ் விநியோகம் செய்யும் சரவணா ஏஜென்சிக்கு சொந்தமானது என்று தெரிவித்தனர். மேலும், இது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் வைத்தனர்.

**பெட்ரோலிய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கு கடிதம்!**

விவரங்களைக் கேட்டறிந்த டி.ஆர்.பாலு, எம்.பி. இந்த சிலிண்டர் வெடி விபத்து குறித்து ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அவர்களுக்கு உடனடியாக விரிவான கடிதம் எழுதி உள்ளார். பெட்ரோலிய அமைச்சருக்கு நேற்று (4.9.2023) எழுதிய தனது கடிதத்தில் டி.ஆர்.பாலு பல்வேறு வினாக்களை எழுப்பியுள்ளார்.

நின்ற நிலையில் இருந்த வாகனத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கேஸ் சிலிண்டர் தானாகவே எப்படி வெடிக்க முடியும்? சிலிண்டர் தயாரிப்பில் குறைபாடுகள் உள்ளனவா? உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கில் சிலிண்டர்களின் தரம் மற்றும் பாதுகாப்பு அம்சங்களில் எண்ணெய் நிறுவனங்கள் சமரசம் செய்கின்றனவா? சிலிண்டர்கள் மக்களுக்கு விநியோகம் மேற்கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறை விதிகளைப் பின்பற்றுவதில் தவறு நேர்ந்துள்ளதா? எனப் பல கேள்விகளை கேஸ் உபயோகிப்பாளர்களும் பொதுமக்களும் எழுப்பி உள்ளபடியால் அவற்றுக்கு விடை காண உடனடியாக உரிய விசாரணையை ஒன்றிய அரசு மேற்கொள்வதுடன் கேஸ் சிலிண்டர்கள் முழு பாதுகாப்புடன் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று டி.ஆர்.பாலு எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

### விழுப்புரம் மாவட்டம் - நவமால்மருதூரில்

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 5-

விழுப்புரம் மாவட்டம், நவமால்மருதூரில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கடந்த சில தினங்களுக்கு முன்னர் விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், நவமால்மருதூர் ஊராட்சி லெனின் நகர் பகுதியில் அசுத்தமான குடிநீரை அருந்தியதால், அப்பகுதியைச் சேர்ந்த மற்றும் அங்கு நடைபெற்ற திருவிழாவில் கலந்துகொள்ள வெளியூரிலிருந்து வருகை புரிந்திருந்தவர்களுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்த கடலூர் மாவட்டம், செல்வன் குப்பம் பகுதியைச் சேர்ந்த திருமதி.சியாமளா, க/பெ. சுப்பையா என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த திருமதி. சியாமளா அவர்களின் கணவர் மற்றும் குழந்தைகளுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.




# தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா -
# தி.மு.க. பவள விழா ஆண்டு
# தி.மு.க. முப்பெரும் விழா 2023

கலைஞர் 100 1924 - 2023

நாள் : 17-09-2023 மாலை 5.00 மணி.
இடம் : பள்ளிகொண்டா. வேலூர்

வரவேற்புரை :
**ஏ.பி. நந்தகுமார்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாவட்ட தி.மு.க.

தலைமை :
பொதுச்செயலாளர் **துரைமுருகன்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை பரிசு வழங்கும் விழா**
**“கழக விருது”க்காக** தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில்
ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று
- பணமுடிப்பு வழங்குதல்

விருது - பரிசுகள் வழங்கிச் சிறப்புரை :
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**தலைவர் மு.க.ஸ்டாலின்**

: வாழ்த்துரை :
பொருளாளர் **டி.ஆர். பாலு**
முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு**
துணைப் பொதுச்செயலாளர்கள் முனைவர் **க.பொன்முடி**
**ஆ.இராசா**
**கனிமொழி கருணாநிதி**
அந்தியூர் **ப.செல்வராஜ்**

நன்றியுரை :
**ப.கார்த்திகேயன்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாநகர தி.மு.க.



**பெரியார் விருது**
**திரு. கி.சத்தியசீலன்**



**அண்ணா விருது**
**திரு. க.சுந்தரம்**



**கலைஞர் விருது**
மாண்புமிகு **ஐ. பெரியசாமி**



**பாவேந்தர் விருது**
திருமதி **மலிகா கதிரவன்**



**பேராசிரியர் விருது**
**திரு.ந.இராமசாமி**

**தி.மு.க. தலைமைக் கழகம்**